## 17. திருக்குன்றக்குடி.

*பண் - காந்தாரம்.*

**பூ**முடி விண்ணவர் வாழ்வும் பூதல மன்னவர் வாழ்வும்
தூமுடி நாகர்கள் வாழ்வுஞ் சுந்தர நின்னடி யார்கள்
தாமுறு வாழ்வினுக் கேயோர் சற்றுநே ராகுமோ நாகர்
கோமுனி வோர்தொழுங் கோவே குன்றக் குடியுறை தேவே. 1

**ஆ**றுச மயங்க ளெங்கு மானந்த மாய்விளை யாடி
ஈறுமு தனடு வேது மிலாதவி ருன்னடி நேடி
நீறணி தொண்டர்கள் வாழ்வே நித்திய மென்றொரு வாய்மை
கூறும றைபுகழ் கோவே குன்றக் குடியுறை தேவே. 2

**நா**சமில் லாவுயி ரெல்லா நற்கதி சேரவென் றேயோர்
மாசிலு ருக்கொண்டங் கங்கு மன்னுதி ருக்கோவில் கொண்டு
தேசிக னாயவி ரன்பைச் சிந்தையில் வைத்துள்ள வென்றன்
கூசல றுத்தருள் கோவே குன்றக் குடியுறை தேவே. 3

**ஆ**திய னாதியு நீயா யண்டகோ டியெங்கு நீயாய்த்
தீதிலு யிர்க்குயிர் நீயாய்த் திகழொரு பூரணந் தன்னை
மேதினி மீதுள்கு வோரே விஞ்சறி வாக்கமுள் ளோர்கள்
கோதில்வெ யிலயிற் கோவே குன்றக் குடியுறை தேவே. 4

**மா**வலர்க் கொந்தள வள்ளி மையலிற் சிக்கிய மாயக்
காவல வுன்னடி யாரைக் கண்டவர்க் குந்துயர் தீரும்
தாவில கங்குளிர் கொள்ளுஞ் சத்திய கேவலம் விள்ளும்
கூவிய முங்குமென் கோவே குன்றக் குடியுறை தேவே. 5

***5.மையல்*** *= உன்மத்தம் ; "உன்மத்த மாழ்கல் கருதிய வனந்த ரேமங் களன் பேது மையல்" என்று* ***சூடாமணி****நிகண் டுரைத்தலின் இதனையறிக. இவ்வுன்மத்தம் "உணரானம" ஆமென்று* ***பிங்கலந்தை*** *கூறும். இவற்றான் தினைப்புனப் பரண்மிசை நிற்கும் வள்ளிமாதேவி, குமாரரே விவாகம் விழைந்து தன்னோடு வாதிடுகின்ற வேடரென உணராமையும், வாதிடுதல் காரணமாக அவள் அவரை நிந்தித்த பின்னரும் அவர் அவ்விடம் விட்டு விலக மனமில்லாது நிற்கு நிலையையும், அவ்வேட வடிவு மாயவித்தையைச் சேர்ந்த தென்பதையு முணர்த்தவே "வள்ளி மையலிற் சிக்கிய மாயக் காவல" என்று தெரித்தாரென்க. மையலும், சிக்கிய தன்மையும் உண்மையில் இன்னனவென வுரைத்தது தானே இங்ஙனம் நுட்பமா யறியக் கிடப்பது.*

**எ**ட்டுருத் தெய்வமு நீயே யெட்டுக்க தீதமு மாயே
தட்டுப்ப டாதவ தீத சாமியு நீயென வோர்வார்
முட்டுப்ப டாமல்வந் தென்று முற்றுச்செ யுமருட் பொன்னைக்
கொட்டிக்கொ டுக்கின்ற கோவே குன்றக் குடியுறை தேவே. 6

**பா**ட்டினு னைப்புகழ்ந் தேமண் பாட்டையொ ழித்துள்ள வன்பர்
நாட்டிலி ருக்கினுங் காட்டை நண்ணியி ருக்கினு மன்றே
கேட்டதெல் லாமளித் தென்றுங் கேடில ரும்பொரு டன்னைக்
கூட்டிக்கொ டுத்திடுங் கோவே குன்றக் குடியுறை தேவே. 7

**ஈ**டிலி ணைமலர்த் தாள்க ளெண்ணுவ துங்கழ லன்பர்
தேடொரு ஞானமு நல்லோர் சேர்க்கையு மேநிலை யாமென்
றோடிழி சிந்தையை வாங்கி யுன்னும காசிவ யோகிற்
கூடிய ளாவொரு கோவே குன்றக் குடியுறை தேவே. 8

**சு**க்கில வாக்கையி னுள்ளே சூழும லவிரு ளுள்ளே
பக்குவ மின்றியெந் நாளும் பந்தப்பட் டேயுள்ள வென்னைச்
சிக்கென வேபற்ற வந்து திருத்திய வுன்பத மீதி
குக்குட கேதனக் கோவே குன்றக் குடியுறை தேவே. 9

**ந**ற்றமிழ் பாடுநக் கீரன் ஞானவெ ளியனு பூதி
சொற்றவ னேத்தரு ளோனே தோகைம யிற்பரி யானே
இற்றையெ னக்கருள் வோனே யெங்கள் சிவபெரு மானே
குற்றமி லாமறைக் கோவே குன்றக் குடியுறை தேவே. 10

மன்மத வருடம் (கி.பி. 1895) ஆடிமாதம் 3ஆம் தேதி புதவாரம்.